**FORM I**

# NOTICE OF ELECTION

(See rule 3 of the Conduct of Election Rules, 1961)

## Election to the Council of States

**(To fill the vacancy caused due to the resignation of Thiru. R. Vaithilingam on 07.05.2021)**

Notice is hereby given that :-

(1) an election is to be held to fill a casual vacancy to the Council of States by the elected Members of the Tamil Nadu Legislative Assembly;

(2) nomination papers may be delivered by a candidate or by any of his proposers to **Thiru. K. Srinivasan, Returning Officer and Secretary, Tamil Nadu Legislative Assembly Secretariat** or to Thiru. B. Subramaniyam, Assistant Returning Officer and Additional Secretary, Tamil Nadu Legislative Assembly Secretariat at Legislative Assembly Secretariat, Chennai - 600 009 between 11.00 a.m. and 3.00 p.m. on any day (except on Sunday, the 19th September 2021) and not later than the 22nd September, 2021;

(3) forms of nomination paper may be obtained at the place and time aforesaid;

(4) the nomination papers will be taken up for scrutiny at the office of the Secretary, Legislative Assembly Secretariat, Chennai - 600 009 on 23rd September 2021 at 11.00 a.m.;

(5) notice of withdrawal of candidature may be delivered either by a candidate or by any of his proposers or by his election agent who has been authorized in writing by the candidate to deliver it to either of the officers specified in paragraph (2) above at his office before 3.00 p.m. on 27th September 2021;

(6) in the event of the election being contested, the poll will be taken on 4th October 2021 between the hours of 9.00 a.m. and 4.00 p.m. at the Legislature Committee Room in the Ground Floor of Main Secretariat Building, Secretariat, Chennai-600 009.

K. Srinivasan 15.9.2021

**Place: Chennai - 600 009**
**Date : 15.09.2021**

**(K. SRINIVASAN)**
**Returning Officer & Secretary**
**Tamil Nadu Legislative Assembly Secretariat**

## படிவம் எண்–1

## தேர்தல் அறிவிப்பு

(தேர்தல் நடத்துவதற்குரிய விதிகள் 1961–இன் விதி 3–ஐ காண்க)

**மாநிலங்களவைக்கு நடைபெறும் தேர்தல்**

*(07.05.2021 அன்று திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புவதற்காக)*

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில்:–

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவையில் தற்காலிகமாக ஏற்பட்ட ஒரு காலியிடத்தை நிரப்புவதற்கான தேர்தல் நடைபெற உள்ளது.

2. வேட்பாளர் அல்லது அவருடைய பெயரை முன்மொழிபவர்களில் எவரேனும் ஒருவர், திரு. கி. சீனிவாசன், தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம் அவர்களிடம் அல்லது திரு. பா. சுப்பிரமணியம், தேர்தல் நடத்தும் உதவி அதிகாரி மற்றும் கூடுதல் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம் அவர்களிடம், சென்னை–600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள அலுவலகத்தில் எந்நாளிலும், (19.09.2021 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிக்குள்ளாக 22.09.2021–ஆம் நாளுக்கு மேற்படாதவாறு வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

3. மேலே குறிப்பிடப்பெற்றுள்ள நேரம் மற்றும் இடத்தில், வேட்பு மனு படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வேட்பு மனுக்கள், சென்னை–600 009, சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளர் அலுவலகத்தில் 23.09.2021–ஆம் நாளன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. வேட்பாளர் விலகலுக்கான அறிவிப்பை, வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர் அல்லது வேட்பாளரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அவரது தேர்தல் முகவர், மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் எவரிடத்திலேனும் அவரது அலுவலகத்தில் 27.09.2021–ஆம் தேதியன்று பிற்பகல் 3.00 மணிக்குள் அளிக்கலாம்.

6. தேர்தலில் போட்டி இருப்பின், 04.10.2021–ஆம் நாளன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில், சென்னை–600 009, தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

கி. சீனிவாசன் 15.9.2021

(கி. சீனிவாசன்)

தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் செயலாளர்

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

இடம் : சென்னை – 600 009,

நாள் : 15.09.2021.